**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 2/ 2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா**. 10**
**Defence**
**Court**

**Name : பேரின்பராஜா**

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 16th September 2021.

முதல் விசாரணை:

நான் தென்காசியில் உள்ள சிந்தாமணி , கீழத்தெருவில் வசித்து வருகிறேன். நான் வேன் டிரைவாக தொழில் செய்து வருகிறேன். இறந்தபோன சுரேஷ், சேகர், செந்தில் என்ற செந்தில் குமார் ஆகியோரை எனக்கு தெரியாது. சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. போலீசார் வீட்டிலிருந்த என்னிடம் வெள்ளை நிற பேப்பரில் தான் கையெழுத்து வாங்கினார்கள் நான் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை. வீட்டிலிருந்த என்னை அழைத்து சென்று போலீசார் வெற்றுப்பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள் எனக்கு இந்த வழக்கு சம்மந்தமாக எந்த விவரமும் தெரியாது.

இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு

**தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

குமார்பாண்டியன் அவர் தம்பி செந்தில் ஆகியோர் எனது சித்தப்பா அலெக்ஸாண்டருக்கு நெருங்கி நண்பர் என்றும், கடந்த 14.08.2007 அன்று காலை 10.15 மணிக்கு TN 76 Y 4696 சிடி என்ற மோட்டார் வண்டியில் நானும் எனது சித்தப்பா அலெக்ஸாண்டர், ஆபிரகாம் மூவரும் தென்காசி கூளக்கடை பஜாரில் உள்ள முத்தராம்மன் கோயில் பக்கம் நின்று கொண்டிருந்ததாகவும் அப்போது TN72 Z 9757 என்ற அம்பாசிட்டர் காரில் சென்ற சக்திபாண்டியன், சுரேந்தர், கபிலன், சுப்பிரமணியன் ஆகியோர்கள் சிறிது நேரத்தில் கிழக்கு பார்த்து ஓடிவந்தார்கள் என்றும் அவர்களை V.T.S.R. குடோன் பக்கம் நின்ற சம்சுதீன், மேஸாக், நவாஸ், சுபகான், மற்றும் அவர்களது கூட்டாளிகள் ஆயுதங்களுடன் விரட்டி வந்தார்கள் திரும்பவும் அவர்களை நாங்களும் சேர்ந்து மேற்கு பார்த்து விரட்டினோம் என்றும், அப்போது திருநெல்வேலி அல்வா கடைப்பக்கம் நின்ற சேகரை, அனிபா, அப்துல்லா, அயூப் அன்சாரி, ராஜா முகமது, மீரான் மைதீன் ஆகியோர்கள் அருவாள், கத்தி போன்ற ஆயுதங்களால் தாக்கினார்கள் சேகர் அந்த இடத்தில் கீழே சாய்துவிட்டான் என்றும், இதை பார்த்த நானும், எனது சித்தப்பா ஆபிரகாம் மூவரும் பைக்கில் ஏறி ஆயக்குடி பக்கம் உள்ள சக்திபாண்டியன் தோப்புக்கு சென்று பைக்கையும், அருவாளையும் வைத்து விட்டு போய்விட்டோம் என்று போலீஸ் விசாரணையில் வாக்குமூலமாக சொல்லிவிட்டு தற்போது நானும் எதிரிகளும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதாலும் நாங்கள் சமாதானமாக போய்விட்டோம் என்பதால் அதன் அடிப்படையில் நடந்த சம்பவத்தை மறைத்து உண்மைக்கு மாறாக அரசு தரப்பு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**